இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30.04.2026

## ஆளுநர் ரவி ஆளும் மாநிலம் அமைதியாக இருக்கிறதா?

யாராவது சைக்கிளில் இருந்து கீழே விழுந்தால் கூட, 'தமிழ் நாட்டில் சட்டம் - ஒழுங்கு சரியாக இல்லை', 'பிரிட்டிஷார் ஆட்சியில் இருந்து இப்படித்தான் நடக்கிறது', 'தி.மு.க. ஆட்சி இதனைத் தடுக்கவில்லை' என்று அறைகூவல் விடுத்துக் கொண்டு இருந்தார் ஆளுநர் ரவி. அவராகவே சத்தமில்லாமல் மேற்கு வங்கத்துக்கு மாறுதல் கேட்டுப் போனார். அங்கும் சட்டமன்றத் தேர்தல் நடக்கிறது. அமைதியாக இருக்கிறதா மேற்கு வங்காளம்? அமைதியாகத் தேர்தல் நடத்துகிறாரா ஆளுநர் ரவி?

**எங்கே போனாலும், தனது வேலையை மீறி மற்ற இடங்களில் மூக்கை நுழைப்பதுதான் ஆளுநர் ரவியின் வழக்கம். அதையேதான் மேற்கு வங்கத்திலும் செய்தார். தேர்தல் நடத்த வேண்டியது, தேர்தல் ஆணையத்தின் வேலை. ஆனால் தான் ஏதோ தேர்தல் நடத்துவதைப் போல இவர் காட்டிக் கொண்டார்.**

சுதந்திரமான, நியாயமான, அச்சமற்ற தேர்தலை உறுதி செய்வதற்காக ஆளுநர் மாளிகையில் ஒரு உதவி மையத்தை ஆளுநர் ரவி தொடங்கினார். சுதந்திரமான தேர்தல், நியாயமான தேர்தல், அச்சமற்ற தேர்தல் மேற்கு வங்கத்தில் நடக்கிறதா? நடத்திக் காட்டிவிட்டாரா ஆளுநர் ரவி?

மேற்கு வங்க மாநில சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. அங்கு ஆளும் திரிணாமுல் காங்கிரஸ், பா.ஜ.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுகின்றன. குறிப்பாக திரிணாமுல் - பா.ஜ.க. இடையே நேரடி போட்டி நிலவுகிறது. இங்கு மொத்தம் 294 தொகுதிகள் உள்ளன.ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், மொத்தமுள்ள 294 தொகுதிகளில், 148 இடங்களைக் கைப்பற்ற வேண்டும்.

மம்தா பானர்ஜி, மூன்று தேர்தலாக வென்று முதலமைச்சராக இருக்கிறார். நான்காவது முறையும் ஆட்சி அமைக்கும் முனைப்பில் இருக்கிறார். மேற்கு வங்கத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதை தங்களது மானப் பிரச்சினையாக நினைத்து பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அங்கேயே இருக்கிறார்கள்.

முதற்கட்ட வாக்குப்பதிவு கடந்த 23 ஆம் தேதியன்று நடந்தது. வாக்குப்பதிவின்போது வன்முறை சம்பவங்கள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் 700கும் மேற்பட்ட புகார்கள் அளிக்கப்பட்டன. **இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், வாக்காளர்களைத் தாக்கியது, கட்சி சார்பில் அமைக்கப்பட்ட பந்தல்களை உடைத்தது தொடர்பாக சி.ஆர்.பி.எப். போலீஸாருக்கு எதிராக 100 புகார் மனுக்கள் அளிக்கப்பட்டு இருப்பதுதான். இரண்டு அரசியல் கட்சிகள் மோதிக்கொண்ட தால் அளிக்கப்பட்ட புகார்களை விட, பாதுகாப்புப் படைகள் மீதும் அதிகப்படியான புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன.**

* வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டம் ஜகாடல் பகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் கொடிகளை கட்டிக் கொண்டிருந்தவர்கள் மீது ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியது. திரிணாமுல் - பா.ஜ.க தொண்டர்களுக்கு இடையில் பெரும் மோதல் ஏற்பட்டது. அன்றைய தினம் இரவு பா.ஜ.க. வேட்பாளர் பவன் சிங் வீட்டின் அருகே இரு கட்சித் தொண்டர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டது. இரு கட்சித் தொண்டர்களும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்கள். இதில் பாதுகாப்பு படை வீரர் யோகேஷ் சர்மா மீது குண்டு பாய்ந்தது. அவர் பெருத்த காயம் அடைந்துள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

* திரிணாமுல் தொண்டர் ஒருவர் வீட்டில் 70க்கும் அதிகமான நாட்டு வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

* ஹூக்ளி மாவட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி. மித்தாலி பாக் என்பவரின் வாகனத்தை பா.ஜ.க. வினர் சேதப்படுத்தி இருக்கிறார்கள். மித்தாலி பாக், காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 'நான் எனது வாகனத்தில் பா.ஜ.க. அலுவலக வாசல் வழியாக போன போது எனது வாகனம் தாக்கப்பட்டது' என்று மித்தாலி பாக் சொல்லி இருக்கிறார்.

* முர்ஷிதாபாத் போன்ற பகுதிகளில் கச்சா வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

* தேர்தல் வன்முறைகள் தொடர்பான வழக்குகளை சி.பி.ஐ. (CBI) விசாரணை செய்ய கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

* **வாக்குப்பதிவின் இறுதி நேரத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) பழுதடைந்ததாகக் கூறப்பட்டதை அடுத்து, பிர்பூம் மாவட்டத்தின் கரிசால் பகுதியில் உள்ளூர் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டது. சந்தேகம் கேட்ட பொதுமக்கள் மீது பாதுகாப்பு படை தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.**

* குமார் கஞ்ச் தொகுதியில் தங்களது வேட்பாளர் சுவேந்து சர்க்கார், திரிணாமுல் காங்கிரஸ் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதாக பா.ஜ.க. குற்றம் சாட்டியுள்ளது.

* அசன்சோல் தட்சிண சட்டமன்றத் தொகுதியில் உள்ள ரஹ்மத் நகர் அருகே, பா.ஜ.க. வேட்பாளரான அக்னிமித்ரா பாலின் கார் மீது கற்கள் வீசப்பட்டு, அதன் பின்புறக் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

* முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதில் ஒரு பெண் காயம் அடைந்தார். இதைத் தொடர்ந்து ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினருக்கும் அதே மாவட்டத்தில் அதிகச் செல்வாக்கு பெற்ற ஹுமாயூன் கபீரின் ஆம் ஜனதா உன்னாயன் கட்சியினருக்கும் இடையே மோதல் மூண்டது. இரு தரப்பும் கட்டைகளைக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதுடன் அங்கிருந்த காரையும் தாக்கினர்.அந்த மோதலில் பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

* கோராபஜார் வாக்குச்சாவடியில் நான்கு முறை வாக்குப்பதிவு இயந்திரத்தை மாற்றியும் பிரச்சினை சரியாகவில்லை என்று காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சௌத்ரி தேர்தல் அலுவலர்களிடம் புகார் அளித்தார்.

**இதுதான் ஆளுநர் ரவி ஆளும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலவரம் ஆகும். ரவி திறந்து வைத்திருக்கும் ஹெல்ப் லைன் வேலை செய்கிறதா எனத் தெரியவில்லை.**

இந்த நிலையில் அமித்ஷா சொன்னது அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது. **"தேர்தலுக்குப் பிறகும் மேற்கு வங்கத்தில் 60 நாட்களுக்கு மத்திய படை பாதுகாப்பு தொடரும்"** என்று சொல்லி அச்சத்தை அதிகப்படுத்தி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. **"மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தாலும் தொடர்ந்து 60 நாட்களுக்கு பாதுகாப்புக்கு மத்தியப் பாதுகாப்புப் படை நிறுத்தப்படும். எனவே மக்கள் எதற்கும் அச்சப்படத் தேவையில்லை"** என்று சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர். மேற்கு வங்க மாநில மக்கள் எத்தகைய அச்சத்தில் வாழ்கிறார்கள் என்பதை உள்துறை அமைச்சரின் பேச்சே உணர்த்துகிறது.


**இதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க. கவலைப்படவில்லை. 'பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தாலும் நீங்கள் மீன் சாப்பிடலாம், தடை போட மாட்டோம்' என்று பரப்புரை செய்கிறார்கள். ஆட்சிக்கு வர வேண்டுமானால் எதை வைத்தும் பரப்புரை செய்யும் பா.ஜ.க.**

### 3வது நாளாக நடைபயிற்சி மேற்கொண்டார்!

# கொடைக்கானலில் அருங்காட்சியகம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!

### சைக்கிளில் பயணித்து பொதுமக்களுடன் கலந்துரையாடினார்!









**கொடைக்கானல், ஏப். 30 -**

**கொடைக்கானலில் நடைபயிற்சி மற்றும் சைக்கிளில் பயணித்து பொதுமக்களுடன் கலந்துரையாடிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். மேலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அருங்காட்சியகத்தையும் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.**

சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 23ம் தேதி முடிவடைந்தது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலையொட்டி, முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பல்வேறு மாவட்டங்களுக்கும் தொடர்ச்சியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

தற்போது வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், குடும்பத்தினருடன் கொடைக்கானல் சென்று உள்ளார். அங்கு நடைபயிற்சி மேற்கொள்வதையும், பொதுமக்களை சந்திப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், கொடைக்கானல் ஏரி சாலையில் நேற்று முன்தினம் காலை நடைபயிற்சி மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிறிது நேரம் சைக்கிளில் பயணித்து பொதுமக்களுடன் கலந்துரையாடினார். அப்போது, முதலமைச்சருடன் பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

**அருங்காட்சியகத்தை பார்வையிட்ட முதலமைச்சர்!**

இதனைத் தொடர்ந்து கொடைக்கானலில் உள்ள அருங்காட்சியகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பழமையான மற்றும் அரிதான கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார். அவற்றை புகைப்படங்கள் எடுத்தும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தமிழ்நாடு 2ஆம் ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளது!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகிழ்ச்சி பதிவு!

**சென்னை, ஏப். 30 -**

**"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு 2ஆம் ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளது" என்று அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகிழ்ச்சியுடன் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

'திராவிட மாடல்' ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாடு தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சி பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். திராவிட நாயகர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



அவர்களின் அரவணைப்பில் நம் தமிழ்நாடு தொடர்ந்து வளரும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இது சாதாரண வளர்ச்சி அல்ல, திட்டமிட்ட முன்னேற்றம் என்பதையே இது நிரூபிக்கிறது. இதுவே அனைவரையும் உள்ளடக்கிய பரவலாக்கப்பட்ட திராவிட மாடல் வளர்ச்சி. இதில் முக்கிய தகவல் என்னவென்றால், இந்திய அளவில் இது அதிகம் என்பதைக் கடந்து, ஏற்கனவே உயர்ந்து இருக்கும் ஒரு மாநிலம் இவ்வளவு வேகத்தில் வளர்வது உலக அளவிலும் அரிது! இது சாதாரணமாக கிடைத்த வளர்ச்சி அல்ல. உழைப்பு உழைப்பு உழைப்பு மிகக் கடின உழைப்பினால் கிடைத்த வெற்றி.

தி.மு.க. ஆட்சியின் முந்தைய காலங்களிலும் இதேபோன்ற வலுவான வளர்ச்சி பதிவாகியுள்ளது. தொடர்ந்து 15-20 ஆண்டுகள் இப்படியான வளர்ச்சி நடந்தால், சீனா, தென் கொரியா போன்ற வளர்ச்சி இங்கேயும் நிச்சயம் சாத்தியம்தான்! 2030க்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை உறுதியாக தனது கையில் எடுத்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்த வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளும் தொடரும். இந்த பாதையை வலுப்படுத்தி, முதலீடு, தொழில், வேலைவாய்ப்பு வளர்ச்சியை முன்னெடுத்து வரும் திராவிட நாயகரின் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி இது! தமிழ்நாடு வளர்கிறது. தமிழ்நாடு வழிகாட்டுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து வெல்லும் என்று அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.